செ.வெ.எண்:10 / மே /2020 நாள்: 04.05.2020

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், கீழஅம்மாபேட்டை கிராமம், மணப்பாறை வட்டம், எப்.கீழையூர் ஆகிய இடங்களில் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் 137 குடும்பங்களுக்கு அரிசி, துவரம்பருப்பு, சமையல் எண்ணெய், கோதுமை மாவு, ஆகிய அத்தியாவசிய பொருட்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் இன்று(04.05.2020) வழங்கினார்.

------------------

ஸ்ரீரங்கம் வட்டம், கீழஅம்மாபேட்டை கிராமம் தடைசெய்யப்பட்ட பகுதயாக அறிவிக்கப்பட்டுள்ளது. கீழஅம்மாபேட்டையில் உள்ள 90 குடும்பங்களுக்கும், மணப்பாறை வட்டம், எப்.கீழையூர் கிராமத்தில் 47 குடும்பங்களுக்கும் என மொத்தம் 137 குடும்பங்களுக்கு தலா 5கிலோ அரிசி, 1கிலோ துவரம் பருப்பு, 1லிட்டர் சமையல் எண்ணெய், 1 கிலோ கோதுமை மாவு ஆகிய அத்தியாவசிய பொருட்களின் தொகுப்புகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரடியாக சென்று வழங்கினார்.

சென்னை கோயம்பேட்டிலிருந்து மணப்பாறை வட்டம், எப்.கீழையூர் கிராமத்திற்கும், ஸ்ரீரங்கம் வட்டம், கீழஅம்மாபேட்டை கிராமத்திற்கும் வருகைதந்தவர்கள் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கையாக சுகாதாரத்துறை வழிகாட்டுதலின் படி 14 நாட்கள் தனிமையில் இருக்க வேண்டும் என்றும், வெளியில் நடமாட வேண்டாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் மணிகண்டம் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.சரவணன், ஸ்ரீரங்கம் வட்டாட்சியர் திரு.ஸ்ரீதர் மணப்பாறை வட்டாட்சியர் திருமதி.தமிழ்கனி, மணப்பாறை ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் திருமதி.ஆர்.ரேவதி, திரு.பாபுஅண்ணாதுரை மற்றும் பலர் உடனிருந்தனர்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.